# உறை வெப்பநிலை / கடுங்குளிர் சிகிச்சை (Cryotherapy)

## 1. உறைவெப்பநிலை / கடுங்குளிர் சிகிச்சை முறை என்பது யாது?

தோலின் வெப்பநிலையை மிகவும் தாழ்ந்த, உறை வெப்பநிலைக்கு கொண்டு செல்வதன் மூலம் தோலில் ஏற்பட்டுள்ள சில நோய்க் கட்டிகளை அகற்றும் ஒரு சிகிச்சை முறை கடுங்குளிர் / உறைவெப்பநிலைச் சிகிச்சை ஆகும். தோலை உறைவெப்பநிலைக்குக் கொண்டு செல்ல பொதுவாக திரவ நைதரசன் (Liquid Nitrogen) பயன்படுத்தப்படுகிறது.

## 2. திரவ நைதரசன் (Liquid Nitrogen) என்றால் என்ன?

திரவ நைதரசன் என்பது திரவநிலையிலுள்ள நைதரசன் வாயு ஆகும். இதன் கொதிநிலை $-196^{O}C$ ஆகும். இது கடுங்குளிரானது.

## 3. உறைவெப்பநிலை/கடுங்குளிர் சிகிச்சை எவ்வாறு வழங்கப்படுகிறது?

- திரவ நைதரசன் இதற்கென உள்ள விசேட உபகரணத்தின் மூலமாக (Spray gun) தோலின் மீது பீய்ச்சி அடிக்கப்படும். சிலவேளைகளில் பஞ்சினால் தொட்டும் தோலின் மீது வைக்கப்படும். இது ஒரு சில விநாடிகளே நீடிக்கும் ஒரு சிகிச்சை முறையாகும். தோலிலுள்ள கட்டியின் அளவு, தடிப்பு என்பவற்றைப் பொறுத்து சிகிச்சை நேரம் வேறுபடும்.
- திரவ நைதரசனைப் பிரயோகிக்கப்படும் போது தோல் வெப்பநிலை உறைவெப்பநிலைக்குச் சென்றதும் தோல் வெள்ளை நிறமாக மாறும். ஓரிரு நிமிடங்களில் மீண்டும் பழைய நிலைக்கு வரும். சில சந்தர்ப்பங்களில் தோலின் வெப்பநிலை பழைய நிலைக்கு வந்ததும் இரண்டாவது முறையும் சிகிச்சை திரும்பவும் செய்யப்படலாம்.
- இச் சிகிச்சையின் போது மிகக் குறைந்தளவு நோ / வலி உணரப்படலாம். கடுமையான வலி ஏற்பட்டால் வலி நிவாரணிகள் பாவிக்கலாம்.

## 4. சிகிச்சைக்குப்பின் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை யாவை?

- சிகிச்சையளிக்கப்பட்ட இடத்தை சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். மருந்து கட்டுவதோ அல்லது பிளாஸ்ரர் போடுவதோ வழமையாகத் தேவைப்படாது.
- ஓரிரு நாட்களில் சிகிச்சை அளிக்கப்பட்ட இடத்தில் அயர் / கசடு (scab) தோன்றும். இது ஓரிரு வாரங்களில் தானாக கழன்று விடும்.
- நோயின் தன்மையைப் பொறுத்து ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சிகிச்சை தேவைப்படலாம். குறிப்பிட்ட கால இடைவெளியில் (2-3 கிழமைகள்) மீண்டும் சிகிச்சை வழங்கப்படும்.

## 5. சிகிச்சையின் பின்விளைவுகள்

### உடனடியான பின்விளைவுகள்

- கொப்புளங்கள் - கொப்புளங்கள் ஏற்படுவதும் ஒரு வழமையான பின்விளைவு ஆகும். சில நாட்களின் பின் அயர் / கசடு உருவாகும். சிலவேளைகளில் இரத்த நிறமைான திரவத்தை கொப்புளங்கள் கொண்டிருக்கலாம். இவை ஆபத்தானவை அல்ல. மிகவும் கடுமையான தாங்க முடியாத வலி இருந்தால் வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.
- கிருமித்தொற்று – மிகவும் அரிதாக கிருமித்தொற்று ஏற்படலாம். சீழ்பிடித்தல், அதிகரித்த வலி போன்றவை கிருமித்தொற்றின் அறிகுறிகளாகும். இவற்றிற்கு வைத்தியரை நாடி சிகிச்சை பெற வேண்டும்.

### நாட்பட்ட பின் விளைவுகள்

- நிறமாற்றம் - சிகிச்சை அளிக்கப்பட்ட தோலில் அல்லது அதைச் சுற்றிவர உள்ள தோலில் வெள்ளையாதல் / கறுப்பாதல் சிலவேளைகளில் உண்டாகலாம். வழமையாக இவை காலப் போக்கில் குறைவடையும். ஒரு சிலரில் நிரந்தரமாக இருக்கலாம்.
- தழும்புகள் - அரிதாக ஆழமான சிகிச்சையின் பின் தழும்புகள் ஏற்பட வாய்ப்புண்டு.
- விறைப்பு – சிகிச்சையின் போது மேற்றோல் நரம்புகள் பாதிக்கப்பட்டால் அந்நரம்பினால் ஆளுமைக்குட்பட்ட பகுதியில் விறைப்பு ஏற்பட இடமுண்டு. சில மாதங்களின் பின்பு உணர்வு பழைய நிலைக்கு வரும்.
- ஒரு சில சந்தர்ப்பங்களில் நோய் முற்றாக குணமடையாத சந்தர்ப்பங்களில் திரும்பவும் வர இடமுண்டு.

## 6. உறைநிலை / கடுங்குளிர் சிகிச்சை தேவைப்படும் நோய்கள் ?

- பாலுண்ணி / வைரஸ் மருக்கள் (viral warts)
- மேற்தோலில் ஏற்படும் தீங்கில்லாக் கட்டிகள். (தோல் மீள் உருவளர்ச்சிகள் - seborrhoeic keratosis, actinic keratosis)
- சில வகையான தோல் புற்று நோய்கள்
- கிருமித்தொற்றினால் தோலில் ஏற்படும் கட்டிகள் (chromoblastomycosis, leishmaniasis)